BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# 100 நாட்கள் ஆகிவிட்டன: நகரில் கோவிட் -19 (COVID-19) தொற்று பரவல் பற்றிய புது செய்திகள்

ப்ராம்ப்ட்டன், ON (மே 6, 2020) – கோவிட்-19 (COVID-19) தொற்று பரவலுக்கு எதிர்ச்செயலாக ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் தனது அவசர நிலை இயக்க செயல்பாடுகள் மையத்தின் முதலாவது கூட்டத்தை நடத்தி இன்றுடன் 100 ஆவது நாள் ஆகிவிட்டது.

மார்ச் மாதத்தில் நிலைமை மோசமடைந்ததால், நகர சமுதாயத்தினரின் உடல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினைக் காக்க உதவும் பொருட்டு, நகர நிர்வாகம் சில குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்தது; இதில் வசதியமைபுக் கட்டிடங்களை மூடுதல், நிகழ்ச்சிகளை ரத்து செய்தல், மற்றும் ஒரு அவசர நிலையை பிரகடனம் செய்தல் ஆகியவை அடக்கம்.

இந்த தொற்றுக் கிருமியினால் நகரின் சமுதாயத்தினர் மற்றும் பொருளாதாரத்தின் மீது பாழாக்க வல்ல பாதிப்புக்கள் எவை என இனம் கண்டதினால், நகரின் மேயர் அவர்களும் கவுன்சிலர்களும் இணைந்து இந்த நான்கு தனித்தனி பணிப்படைகளையும் தேவை கொள்வோருக்கான ஆதரவளிக்கின்ற நிகழ்ச்சித்திட்டத்தினையும் உருவாக்கி அறிவித்தார்கள்: மேயரின் கோவிட்-19 (COVID-19) பொருளாதார ஆதரவு,சமுதாய ஆதரவு, மூத்த குடிமக்களுக்கான ஆதரவு, ஆதரவு தரும் இளைஞர் பணிப்படைகள் மற்றும் கொல்லைப்புற வீட்டுத் தோட்டம் அமைக்கும் திட்டம்.

உள்ளூரில் பங்கு வகிக்கும் கூட்டாளிகள், தன்னார்வலர்கள் மற்றும் வணிகர்கள் ஆதரவுடன் நகரில் இருக்கின்ற ஆயிரக்கணக்கானோருக்கு இந்த பணிப்படைகள் பேராதரவு தந்திருக்கின்றன.

**முக்கியாம்சங்கள்**

*கொல்லைப்புற வீட்டுத் தோட்டம் அமைக்கும் திட்டம்*

- இந்தத் திட்டத்தில் சேருவதற்காக நாளது தேதி வரை 11,000 க்கும் மேலான வேண்டுகோள்கள் பெறப்பட்டுள்ளன (சுமாராக 5,000 குடியிருப்பு வாசிகள் காத்திருப்பு பட்டியலில் இருக்கின்றனர்). இந்த திட்டத்திற்கான பங்கேற்பாளர் அளவு எட்டப்பட்டுவிட்டது.

*பொருளாதார ஆதரவு பணிப்படை*

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

- இதன் மூலம் 5,000 க்கு மேற்பட்ட வணிகர்களுக்கு இவ்வாறான ஆதரவு தரப்பட்டுள்ளது: ஒருவருக்கு ஒருவர் என்ற வகையிலான ஆதரவு, ஆலோசனை மற்றும் நிகழ்நேர கருந்தரங்குகள் மற்றும் பயிற்சி. கோவிட் -19 (COVID-19) தொற்று பரவல் சூழலைச் சந்திப்பதற்கான இயக்க செயல்பாடுகளில் உதவுதல், சட்டங்களைப் புரிந்து கொள்ளுதல், வணிகங்கள் தங்கள் செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக கூடுதல் உற்பத்தி விரிவாக்கம் செய்ய வைத்தல்.
- அவரவர் இடத்தில் இருந்தபடியே, தொலைபேசி (டெலி டவுன் ஹால்) வழியாக நூற்றுக் கணக்கானோர் ஒரே சமயத்தில் கோவிட்-19 (COVID-19 ) தொற்று பரவல் காரணமான பாதிப்புக்கள் மற்றும் சாத்தியமான தீர்வுகள் பற்றி கலந்தாலோசிக்க கிட்டத்திட்ட 900 சிறு வணிகர்களை ஈடுபடுத்துதல் .
- கலைஞர்களுக்கு ஆதரவளிக்கும் விதமாக குடியிருப்புவாசிகளுக்கு நேரடியாக நடத்தப்பட்டுவந்த கேளிக்கை சார்ந்த கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளை, ஆன்லைன் வழியாக தொடர்ந்து வழங்கியபடியே இருத்தல் .

*மூத்த குடிமக்களுக்கு ஆதரவளிப்பதற்கான பணிப்படை*

- தகவல்கள் மற்றும் பொருட்கள் வேண்டி செய்யப்பட்ட 280 வேண்டுகோள்களுக்கு செவிசாய்த்து 113 தடவைகளில் மளிகைப்பொருட்கள் கொண்டு சேர்க்கப்பட்டன.
- நகர நிர்வாகம் அளிக்கின்ற ஆதரவுகள் மற்றும் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களை வழங்குவதற்காக 35 சமுதாய அமைப்புக்களுடன் சேர்ந்து செயல்படுத்தப்பட்டன.
- வயதான முதுமக்கள் செயல்பாட்டுடன் இயங்குவதை உற்சாகப்படுத்துவதற்காக மூத்தகுடிமக்களுக்கான டிஜிட்டல் கஃபே ஒன்று உருவாக்கப்பட்டது மற்றும் இதற்காகவே, இரண்டு தொலைபேசி வழி கூட்டு மாநாடுகளும் (டெலி டவுன் ஹால்) ஆகியவையும் நடத்தப்பட்டன.
- உள்ளூர் மளிகைக் கடைக்காரர்களுடன் கூட்டு வைக்கப்பட்டது: லோங்கோஸ் ( Longo's), இந்தியா பஜார் ப்பிக்ஸ் அண்ட் ஃபோர்ட்டினோஸ் (India Bazaar Fresh Piks and Fortinos); தங்களுக்கு என்ன வேண்டும் என்றை ஆணையை ஆன்லைன் வழியாக செய்ய முடியாத மூத்த குடிமக்களுக்கு, பணம் செலுத்துவதற்கான ஒரு தனி கார்டு உருவாக்கப்பட்டது.

*சமூக ஆதரவுக்கான பணிப்படை*

- உணவு வினியோகிக்கின்ற பின்வரும் நான்கு நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து அவசர கால உணவு விநியோகிக்கும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது : ரீஜெனெரேஷன் (Regeneration), க்னைட்ஸ் டேபிள் (Knights Table), கால்ஸா எய்ட் (Khalsa Aid) மற்றும் யுனைடெட் சிக்ஸ் (United Sikhs). கடந்த ஏழு வாரங்களில் ப்ராம்ப்ட்டன் நகர வாசிகளுக்கு 1500 க்கும் மேலான (வாரம் ஒன்றுக்கு சராசரியாக 215 உணவுகள்) சாப்பாடு மற்றும் மளிகைப் பொருட்கள் கொண்டு சேர்ப்பிக்கப்பட்டன. மொத்தமாக 550 மணி நேர சேவையாற்றிய, அர்ப்பணிப்பு மிக்க தன்னார்வலர்கள் இல்லாமல் இந்தப் பணி சாத்தியமே இல்லை.
- உணவு விநியோகிப்பவர்களை ஒருங்கிணைக்கின்ற ஒரு மத்தியமயமாக்கப்பட்ட அமைப்பு நிலைநாட்டப்பட்டது. 31,699 பவுண்டுகள் எடை கொண்ட நன்கொடை உணவுகள்

பெறப்பட்டன, மற்றும் கையில் எடுத்துச் செல்லும்படியான உணவு பாத்திரங்கள் அடங்கிய 40 பெட்டிகள் (ஒரு பெட்டிக்கு 100 பாத்திரங்கள்) மற்றும் 6000 அடுக்கு பாத்திரங்களும் பெறப்பட்டன.

- இந்தப் பிராந்தியத்தில், தற்காலிகமான தங்குமிடத்தில் வசித்த மூன்று பேருக்கு, வீட்டு வசதி, பண உதவி மற்றும் இதர ஆதரவுப் பொருகள் அளித்து உதவப்பட்டது; இது அவர்களின் விருப்பத்தின் பேரில் செய்யப்பட்டது.

*ஆதரவளிக்கும் இளைஞர் பணிப்படை*

- இளைஞர் கருத்தாய்வு ஒன்று நடத்தப்பட்டு 14-29 வயது கொண்ட இளைஞர்களிடம், கோவிட்-19 ( COVID-19) தொற்று பரவல் அவர்களை அப்படி பாதிக்கிறது எனக் கேட்கப்பட்டது. இன்றைய தேதிக்கு 200 இளைஞர்கள் பதில் கூறியுள்ளனர்.
- கவலைகள் பற்றி கேட்கவும், வேண்டிய ஆதரவை வழங்கவும், இளைஞர்கள் அடங்கிய 35 சேவை அமைப்புக்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை சந்தித்தனர்.
- இளைஞர்களை வீட்டிலிருக்கும்போதே செயல்பாட்டுடனும் ஈடுபாட்டுடனும் வைத்திருக்க இன்ஸ்ட்டாகிராம் நேரலை அரட்டைகள், டிக்டாக் வீடியோக்கள் மூலம் ஆன்லைன் செயல்பாடுகளுக்கு உதவி புரிதல். இந்த வாரத்தில், நமது நகரம் தேசிய இளைஞர் வாரம் (மே 1-7) அனுசரிக்கிறது இதில் நிகழ்நேர செயல்பாடுகள் இருக்கும்.

கிடைக்க விருக்கும் ஆதாரங்கள், மற்றும் இந்தச் சமயத்தில் இப்படியான ஆதரவு பெறுவது எப்படி என்பதை காண, வருகை புரியவும்: www.brampton.ca/COVID19.

**அறிஞர்கள் கூற்று**

“நமது சமூகத்தினர் எட்ட இருந்தபடியே ஒன்றிணைந்தனர்; இது முடிந்தவரை தாக்கம் மிக்கதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருந்தது. கோவிட்-19 (COVID-19) தொற்று பரவல் காரணமான விளைவுகளுக்கு பெரிதும் ஆட்படக்கூடிய, ஆனால் ஆதரவை வழங்க குடியிருப்புவாசிகள், கூட்டுசேர்வோர் மற்றும் உள்ளூர் வணிகர்கள் முன் வந்தனர். ஒருவழியாக நகரை அதன் இயல்பு நிலைக்கு திறந்து விட நாம் எதிர்நோக்கும் வேளையில் நாம் செய்வதற்கான பலவேலைகள் இன்னும் நிறைய காத்திருக்கின்றன. நமது குடியிருப்புவாசிகள் தொடர்ந்து வீட்டிலேயே இருக்கவும் உடல் ஆரோக்கிய வல்லுனர்கள் சொல்வதைக் கேட்கவும், சமுதாயத்தில் ஒருவருக்கு ஒருவர் ஆதரவளித்துகொள்ளும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நமது குழுவினர், குடியிருப்புவாசிகள் மற்றும் வணிகர்கள் ஆகியோரின் கடின உழைப்பு மற்றும் பொறுப்புணர்வு மூலமாக கோவிட் -19 (COVID-19) தொற்று பரவலைத் தடுப்பதற்கான அநேக விஷயங்களை நாம் சாதித்து விட்டோம். ஆதரவு கண்டிப்பாக வேண்டுவோருக்கு அதனை வழங்கும் அதே

சமயத்தில், நமது சமுதாயத்தினரின் உடல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினைக் காக்கவேண்டிய ஒவ்வொரு முயற்சியையும் நாங்கள் தொடர்ந்து எடுப்போம். ”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca